


பெரம்பலூர், குன்னம் ஆகிய இரண்டு சட்டமன்றத் தொகுதிகளில்,ஓரணியில் தமிழ்நாடு எனும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்படி, பாக நிலை முகவர்கள், பாக நிலை டிஜிட்டல் முகவர்கள், (BLA2,BDA) மற்றும் கிளைச் செயலாளர்கள் ஆய்வுக்கூட்டம், ஜே.கே.திருமண மண்டபத்தில் மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் அமைச்சரும், மண்டல பொறுப்பாளருமான கே.என்.நேரு, அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டு, சிறப்பித்தனர். இதில் பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன், குன்னம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் ஏ.கே.அருண், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் குன்னம் சி.ராஜேந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.அட்சயகோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன் ஆகியோர் உள்ளனர்.



அரியலூர் மாவட்டம், அரியலூர் நகராட்சியில் கட்டப்பட்டு வரும் பேருந்து நிலைய கட்டுமானப் பணிகளை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு, போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் பொ.இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.




கோயம்புத்தூர் ஹிந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரியில் தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் சார்பில் அனைத்து மண்டலங்களுக்கு இடையே நடத்தப்பட்ட ஆடவர் தடகள விளையாட்டு போட்டிகளில் மாநில அளவில் வெற்றி பெற்றவர்களுக்கு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பரிசு கோப்பைகளை வழங்கினார். இதில் கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார், க.கிரியப்பனவர், மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ப.ராஜ்குமார், மின் தொடரமைப்பு கழக மேலாண் இயக்குநர் கு.இந்திராணி, தமிழ்நாடு மின் பகிர்மான கழக இயக்குநர் அ.ரா.மாஸ் கர்னஸ், பத்ம ஸ்ரீ விருது பெற்ற விளையாட்டு வீரர் ஜோஷ்னா உள்பட பலர் கலந்து கொண்டனர்.




புதுக்கோட்டை மாவட்டம் – மாநகராட்சி, மௌண்ட் சியோன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில், பள்ளிக் கல்வித்துறை சார்பில், பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கான, மாநில அளவிலான அடைவுத் தேர்வு மீளாய்வுக் கூட்டம், பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மு.அருணா முன்னிலையில் நடைபெற்றது. உடன் இயக்குநர் (தொடக்கக் கல்வித்துறை) பூ.ஆ.நரேஷ், புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் திருமதி.திலகவதி செந்தில், புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, முதன்மைக் கல்வி அலுவலர் கூ.சண்முகம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

